**மங்கி வரும் வெங்காய விவசாயம்**

First Published : 15 Mar 2010 12:00:00 AM IST



கடலூர் அருகே நாணமேடு கிராமத்தில் அழகாகப் பூத்திருக்கும் வெங்காயச் செடிகள்.

நமது நிருபர்

கடலூர், மார்ச் 14: கடலூர் மாவட்டத்தில் சின்ன வெங்காயம் பயிரிடுவதற்கு நிறைய வாய்ப்புகள் இருந்தும், வேளாண் துறையின் ஆதரவு போதுமான அளவுக்கு இல்லாததால், விவசாயம் செய்வது குறைந்து போய்க்கொண்டு இருக்கிறது.

தமிழ்நாட்டில் திண்டுக்கல், பழனி, கரூர், நாமக்கல் பகுதிகளில் சின்ன வெங்காயம் அதிக அளவில் பயிரிடப்படுகிறது.

1995-க்கு முன் கடலூர் மாவட்டத்தில் கடலூர் ஒன்றியம் நாணமேடு, உச்சிமேடு, கண்டக்காடு, உப்பளவாடி உள்ளிட்ட கிராமங்களிலும், பரங்கிப்பேட்டை, புவனகிரி, கீரப்பாளையம் ஒன்றியங்களிலும் சின்ன வெங்காயம் சுமார் 1000 ஏக்கர் வரை பயிரிடப்பட்டு வந்தது.

ஆனால் கடலூர் மாவட்டத்தில் சின்ன வெங்காயத்துக்கு நியாயமான விலை கிடைக்காததால், பயிரிடும் பரப்பளவு படிப்படியாகக் குறைந்து வருகிறது.

கடலூரில் பயிரிடப்படும் சின்ன வெங்காயம் சாதாரண ரக சின்ன வெங்காயத்துக்கும், பெல்லாரி ரக பெரிய வெங்காயத்துக்கும் இடைப்பட்ட நடுத்தரமான அளவைக் கொண்டதாக இருக்கும். எனவே மக்கள் கடலூர் நாணமேடு வெங்காயத்தை விரும்பி வாங்குவர்.

சுனாமிக்குப் பிறகு கடலூர் மாவட்டத்தில் சின்ன வெங்காயம் சுமார் 100 ஏக்கரில் மட்டுமே பயிரிடப்பட்டு உள்ளது. வெங்காயம் நட்டு 100 நாள்களில் அறுவடைக்குத் தயாராகி விடும். உச்சிமேடு, நாணமேடு, சுபஉப்பளவாடி, கண்டக்காடு, தேவனாம்பட்டினம் கிராமங்களில் தற்போது வெங்காயம் பூத்துக் குலுங்கும் நிலையில் காணப்படுகிறது. கடலூர் பகுதியில் வெங்காயத்துக்கு நியாயமான விலை கிடைக்காததால், வெங்காய விதை தயாரிப்புக்காக, பூவைத் துண்டிக்காமல், வெங்காயத்தையும் எடுக்காமல் விதைக்காக விட்டு விடுகிறார்கள். பிற மாவட்ட விவசாயிகள் கடலூர் வந்து வெங்காய விதைகளை வாங்கிச் செல்கிறார்கள். அதில் ஓரளவுக்கு கூடுதல் விலை கிடைப்பதாக விவசாயிகள் தெரிவிக்கிறார்கள்.

இதுகுறித்து வெங்காயம் சாகுபடி செய்யும் விவசாயி தேவனாம்பட்டினம் செல்வம் கூறியது: நாணமேடு வெங்காயம் சுவை மிகுந்ததாகவும் இருக்கும். ஆனால் கடலூரில் வெங்காயத்துக்கு நியாயமான விலை கிடைக்கவில்லை. மற்ற இடங்களுக்கு எடுத்துச் சென்று, நல்ல விலைக்கு விற்கும் சந்தை வாய்ப்பும் இல்லை.

மற்ற மாவட்டங்களில் வெங்காயத்துக்கு வழங்கப்படும் சலுகைகளும் மானியங்களும் கடலூர் மாவட்டத்தில் இல்லை. தற்போது வெங்காய விதை தயாரிப்பில் பல விவசாயிகள் ஈடுபட்டு உள்ளனர். ஏக்கருக்கு 100 முதல் 150 கிலோ வரை விதை கிடைக்கும். கடந்த ஆண்டு கடலூர் வெங்காய விதை விலை ஒரு கிலோ ரூ.3 ஆயிரம் வரை சென்றது. கடந்த சில ஆண்டுகளில் கிலோ ரூ.300-க்குக் கூட குறைந்து இருக்கிறது. விதை, உரம், பூச்சி மருந்து போன்றவற்றுக்கு அரசு மானியம் மற்றும் சலுகைகள் அளித்தால், கடலூர் மாவட்டத்தில் வெங்காயம் சாகுபடி அதிகரிக்கும் என்றார் செல்வம்.

இதுகுறித்து வேளாண் உதவி இயக்குநர் அசோகன் கூறியது: நாணமேடு வெங்காயம் லேசான உப்பு கலந்த நிலத்தடிநீர் உள்ள கடலோர கிராமங்களில் நன்றாக வளர்கிறது. கூடுதல் நீரைத் தன்னகத்தே கொண்டது. அதனால் பெரிதாக இருக்கிறது. மற்ற ரகங்களுடன் ஒப்பிடும்போது நாணமேடு வெங்காயத்தைக் கூடுதல் நாள்கள் சேமித்து வைக்க முடியவில்லை.

கடலூர் பகுதியில் வெங்காயம் விரைவில் பூப்பதால் விதை தயாரிப்பு லாபகரமாக இருக்கும். வெங்காயம் பற்றி கோவையில் ஆராய்ச்சி செய்யப்படுகிறது. கோ ஆன் 5 என்ற புதிய ரக வெங்காய விதை வெளியிடப்பட்டு உள்ளது. அது கடலூர் நாணமேடு வெங்காயத்தின் குணங்களை அதிகம் கொண்டது. அந்த ரகத்தை கடலூர் விவசாயிகள் பயிரிட முன்வர வேண்டும் என்றார் அசோகன்.

**பயிர்களைப் பாதுகாக்க தடையில்லா மின்சாரம் வழங்க வலியுறுத்தல்**

First Published : 15 Mar 2010 12:38:52 AM IST

கிருஷ்ணகிரி, மார்ச் 14: பயிர்களைப் பாதுகாக்கத் தடையில்லா மின்சாரம் வழங்க வேண்டும் தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

சங்கத்தின் ஒன்றிய ஆலோசனைக் கூட்டம் காவேரிப்பட்டணத்தில் சனிக்கிழமை நடைபெற்றது.

கூட்டத்தில் தென்பெண்ணை ஆற்றிலிருந்து வெளியேறும் உபரி நீரை எண்ணேகோள் அருகிலிருந்து தும்பல்பள்ளி அணை வரை விவசாய பாசனக் கால்வாய் அமைக்க வேண்டும்.

தேங்காய் நேரடி கொள்முதல் செய்ய வேண்டும். ரேஷன் கடைகளில் பூச்சிகொல்லி மருந்து, உரங்கள் வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்துக்கு சங்கத்தின் மாவட்டத் தலைவர் சீனிவாசன் தலைமை வகித்தார். மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் லகுமையா, மாவட்டச் செயலர் கண்ணு, மாநிலக் குழு உறுப்பினர்கள் வெங்கடாசலம், கிருஷ்ணப்பா உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**வெங்காயம் விலை குறைந்தது!**

First Published : 15 Mar 2010 12:38:28 AM IST

போச்சம்பள்ளி, மார்ச் 14: போச்சம்பள்ளி ஞாயிறு வாரச் சந்தையில் சின்ன வெங்காயம் விலை குறைந்தது.

சந்தையில் ஒரு கிலோ சின்ன வெங்காயம் ரூ.6-க்கும், கடைகளில் ரூ.9 முதல் ரூ.10 வரையும் விற்பனையானது.

கடந்த வாரத்தைவிட தக்காளி, கத்தரி, கோஸ் உள்ளிட்ட காய்கறிகளின் விலை வெகுவாகக் குறைந்து காணப்பட்டது.

**கொய்மலர் சாகுபடி பயிற்சி**

First Published : 15 Mar 2010 06:26:26 AM IST

உதகை, மார்ச் 14: நீலகிரி மாவட்டத்தில் உழவர் பயிற்சி நிலையத்தின் சார்பில் உதகை மற்றும் கூடலூர் பகுதிகளில் கிராமப்புறப் பயிற்சிக் கூட்டங்கள் நடைபெற்றன.

உதகை தாலுகாவிற்கு உட்பட்ட பிக்கைகண்டி கிராமத்திலும், கூடலூர் தாலுகாவிற்கு உட்பட்ட மாக்கமூலா கிராமத்திலும் நடைபெற்ற இப்பயிற்சிக் கூட்டங்களில் கொய்மலர் சாகுபடி குறித்த பயிற்சியும், திட்டப்பணிகள் மற்றும் மானியம் குறித்த பயிற்சியும் வழங்கப்பட்டது.

மேலும் தேயிலை சாகுபடி, உரமிடல், பயிர் பாதுகாப்பு, தேயிலை பறித்தல், கவாத்து செய்தல் குறித்த பயிற்சிகளோடு மண் பரிசோதனை குறித்த பயிற்சியும் வழங்கப்பட்டது. மண்புழு உரம் தயார் செய்தல், காய்கறி சாகுபடி குறித்த பயிற்சிகளோடு செயல்முறை விளக்கங்களும் செய்து காண்பிக்கப்பட்டன.

இப்பயிற்சியின்போது தேயிலையில் சிலந்தி பூச்சியைக் கட்டுப்படுத்த ஒரு ஏக்கருக்கு ஓமைட் 160 மி.லி. மருந்தை 160 லிட்டர் நீரில் கலந்து கைத்தெளிப்பான் மூலம் தெளித்து கட்டுப்படுத்துமாறு உபாசி பயிற்சியாளர் சிவானந்தம் தெரிவித்தார். ÷

அதேபோல, தேயிலைப் பயிரை வறட்சியிலிருந்து காப்பாற்ற ஒரு ஏக்கருக்கு ஒரு கிலோ யூரியா, ஒரு கிலோ பொட்டாஷ் உரங்களை 100 லிட்டர் நீரில் கலந்து ஏப்ரல் மாதம் வரை தெளித்து தேயிலை பயிரை காப்பாற்றலாம் என உபாசி பயிற்சியாளர் அன்பரசு குறிப்பிட்டார்.

இப்பயிற்சி முகாம்களில் உழவர் பயிற்சி நிலைய தோட்டக்கலை உதவி இயக்குநர் வி.குணசேகரன், தோட்டக்கலை அலுவலர் சுரேஷ் ராஜன், துணை வேளாண்மை அலுவலர் ஆர்.டி.ராஜன், உதவி வேளாண்மை அலுவலர்கள் பி.மோகன், பி.மூர்த்தி, அன்புராஜ் ஆகியோருடன் ஏராளமான விவசாயிகளும் பங்கேற்றனர்.

**19-ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

First Published : 15 Mar 2010 06:25:31 AM IST

உதகை, மார்ச் 14: நீலகிரி மாவட்ட விவசாயிகள் குறைதீர்ப்பு நாள் கூட்டம் உதகையில் இம்மாதம் 19ம் தேதி நடத்தப்படுகிறது.

÷இது தொடர்பாக மாவட்ட தோட்டக்கலை இணை இயக்குநர் இஸ்ரவேல் தெரிவித்துள்ளதாவது:

நீலகிரி மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் இம்மாதம் 19ம் தேதி உதகையில் மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடத்தப்படுகிறது. மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் நீலகிரி மாவட்ட விவசாயிகள் தங்களது விவசாயம் சம்பந்தப்பட்ட குறைகள் ஏதேனும் இருப்பின் அவற்றை தோட்டக்கலை இணை இயக்குநர், தபால் பெட்டி எண் 72, உதகை-1 என்ற முகவரிக்கு தபாலிலோ அல்லது நேரடியாகவோ கிடைக்குமாறு அனுப்பி வைக்க வேண்டும்.

இக்கூட்டத்தில் விவசாயிகள் தங்களது பொதுவான கோரிக்கைகளை தவிர்த்து விவசாயம் சம்பந்தப்பட்ட மின் இணைப்பு மற்றும் நீர்ப்பாசனம், இடுபொருட்கள் போன்ற கோரிக்கைகளை மட்டும் அனுப்பி வைக்க வேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

**மண் புழு உரம் தயாரிப்பு பயிற்சி முகாம்**

First Published : 15 Mar 2010 12:16:00 AM IST

மதுராந்தகம், மார்ச் 14 : எலப்பாக்கம் ஊராட்சியில் மண் புழு உரம் தயாரித்தல் குறித்த பயிற்சி முகாம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

÷வேளாண் அலுவலர் கிருஷ்ணகுமாரி, உதவி அலுவலர் ஓம் பிராகஷ் உள்ளிட்டோர் மண் புழு உரம் தயாரிப்பு குறித்து செயல்முறை விளக்கத்துடன் விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தனர்.

÷முகாமுக்கு எலப்பாக்கம் ஊராட்சித் தலைவி குணுசுந்தரி தலைமை வகித்தார். துணைத் தலைவர் கோவிந்தராஜ் முன்னிலை வகித்தார். உதவி வேளாண் அலுவலர் தங்கராஜ் வரவேற்றார். உதவி வேளாண்மை அலுவலர் துரைபாபு நன்றி கூறினார்.

**மண் புழு உரம் தயாரிப்பு பயிற்சி முகாம்**

First Published : 15 Mar 2010 12:16:00 AM IST

மதுராந்தகம், மார்ச் 14 : எலப்பாக்கம் ஊராட்சியில் மண் புழு உரம் தயாரித்தல் குறித்த பயிற்சி முகாம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

÷வேளாண் அலுவலர் கிருஷ்ணகுமாரி, உதவி அலுவலர் ஓம் பிராகஷ் உள்ளிட்டோர் மண் புழு உரம் தயாரிப்பு குறித்து செயல்முறை விளக்கத்துடன் விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தனர்.

÷முகாமுக்கு எலப்பாக்கம் ஊராட்சித் தலைவி குணுசுந்தரி தலைமை வகித்தார். துணைத் தலைவர் கோவிந்தராஜ் முன்னிலை வகித்தார். உதவி வேளாண் அலுவலர் தங்கராஜ் வரவேற்றார். உதவி வேளாண்மை அலுவலர் துரைபாபு நன்றி கூறினார்.

**சொட்டு நீர்ப் பாசனம் அமைக்க அழைப்பு**

First Published : 15 Mar 2010 12:41:57 AM IST

நாகப்பட்டினம், மார்ச் 14: தோட்டக்கலைப் பயிர் சாகுபடியில் கூடுதல் மகசூல் பெற சொட்டு நீர்ப் பாசனம் அமைக்க விவசாயிகள் முன்வருமாறு தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் (பொறுப்பு) கோ. கணேசன் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு: குறைந்தளவு நீர் மற்றும் குறைந்த எண்ணிக்கையிலான தொழிலாளர்களைக் கொண்டு மலர்கள், காய்கறி, பழமரப் பயிர்கள், வாழை, தென்னை மற்றும் கரும்பு சாகுபடி செய்ய சொட்டு நீர்ப் பாசன முறை மிகவும் சிறந்த முறை. நாகை மாவட்டத்தில் தோட்டக் கலைத் துறை, வேளாண் துறை, வேளாண் பொறியியல் துறை மற்றும் சர்க்கரை ஆலைகள் மூலம் சொட்டு நீர்ப் பாசனத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. சொட்டு நீர்ப் பாசனம் அமைப்பதற்கு விவசாயிகள் செலவிடும் மொத்த செலவுத் தொகையில் 40 சதவீதத் தொகை மத்திய அரசின் மானியமாகவும், 25 சதவீதத் தொகை மாநில அரசின் மானியமாகவும் வழங்கப்படுகிறது. சொட்டு நீர்ப் பாசனம் முறையில் பயிர்களுக்கு நிரந்தரமாக நல்ல ஈரப்பதமும், காற்றோட்டமும் கிடைக்கிறது. நீரில் கரையும் உரங்களை சொட்டு நீர்ப் பாசனம் மூலம் எளிதாக பயிர்களுக்கு வழங்க முடியும். இதனால், அதிக மகசூல் கிடைக்க வாய்ப்பு ஏற்படுகிறது.

எனவே, தோட்டக்கலைப் பயிர் சாகுபடியில் அதிக மகசூல் கிடைக்க சொட்டு நீர்ப் பாசனம் அமைக்க விவசாயிகள் முனைப்புக் காட்டுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

**மந்த நிலையில் புகையிலை சாகுபடி**

First Published : 15 Mar 2010 06:31:32 AM IST

திருப்பூர், மார்ச் 14: திருப்பூர் மாவட்டம் காங்கயம் மற்றும் அதனை சுற்றியுள்ள காங்கயம்பாளையம், காடையூர், வட்டமலை, கொங்காருபாளையம், கொடுவாய் உள்ளிட்ட பகுதிகளில் சுமார் 5 ஆயிரம் ஏக்கரில் புகையிலை பயிரிடப்பட்டு வருகின்றன.

÷கத்தி புகையிலை, நாட்டுரக புகையிலை என இரு ரகமாக பயிரிடப்படு6ம் புகையிலை முதல் 50 நாட்களுக்கு நாற்று நட்டு அதன் பின்பு 4 மாதம் பயிரிடப்பட்டு புகையிலை அறுவடை செய்யப்படுகிறது. இவ்வாறு அறுவடை செய்யும் புகையிலை அகலம், நீளம் கொண்டு, ஒரு இலையின் விலை நிர்ணயம் செய்யப்படுகின்றன.

÷கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு புகையிலைகள் பதப்படுத்தி விற்பனை செய்யப்பட்டன. ஆனால் தற்போது அறுவடை செய்யப்படும் இலைகளை நேரடியாக வியாபாரிகளுக்கு விற்பனை செய்கின்றனர்.

÷ஒன்றரை அடி அகலம், 2 அடி நீளம் கொண்ட இலை ரூ.7 அல்லது ரூ.8க்கு விற்பனை செய்யப்படுகிறது. ஒரு ஏக்கரில் 6000 செடிகள் சாகுபடி செய்யப்படுவதன் மூலம் ரூ.42 ஆயிரம் விவசாயிகளுக்கு லாபம் கிடைத்தது. இங்கு சாகுபடி செய்யப்படும் புகையிலைகள் குஜராத், மகாராஷ்டிரம், உத்தரப்பிரதேசம், ஒரிசா உள்ளிட்ட மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தன. ஆனால் தற்போது மகாராஷ்டிரம், குஜராத் பகுதிகளில் தூள் புகையிலை அதிகளவில் பயிரிடப்படுவதால் காங்கயம் மற்றும் சுற்றுப் பகுதிகளில் மூன்றில் 2 மடங்கு உற்பத்தி குறைந்து விட்டதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

÷தற்போது ஒரு இலை ரூ,2 முதல் ரூ.3 வரை மட்டுமே விற்கப்படுகின்றன. இதனால் இங்கு பயிரிடப்படும் புகையிலைகள் உள்ளூர் சந்தைக்கு மட்டுமே விற்பனைக்கு எடுத்து செல்லப்படுகின்றன

**ஒரே நாளில் ரூ.2.50 கோடிக்கு பருத்தி ஏலம்**

First Published : 15 Mar 2010 06:30:52 AM IST

ஆத்தூர், மார்ச் 14: சேலம் மாவட்டம் ஆத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் ஞாயிற்றுக்கிழமை ஒரேநாளில் மட்டும் ரூ.2.50 கோடிக்கு பருத்தி ஏலம் நடைபெற்றுள்ளது.

ஆத்தூர் புதுப்பேட்டையில் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம் உள்ளது. இங்கு வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமைகளில் பருத்தி ஏலம் நடைபெற்று வருகிறது. ஆத்தூர் சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த ஏராளமான விவசாயிகள் பருத்தியை விற்பனைக்கு கொண்டு வருவது வழக்கம்.

அதேபோல் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஏலத்தில் ஆர்.சி.ஹெச்.ரக பருத்தி 17,300 மூட்டைகளும், டி.சி.ஹெச். 3,200 மூட்டைகளும், கொட்டு பருத்தி 500 மூட்டைகளும் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டன. இதில், ஆர்.சி.ஹெச். ரக பருத்தி குவிண்டால் ஒன்று அதிகபட்சமாக ரூ.3,511-க்கும், குறைந்தபட்சம் ரூ.3,289-க்கும் ஏலம் போனது.

டி.சி.ஹெச். ரக பருத்தி குவிண்டால் அதிகபட்சம் ரூ.4,960-க்கும், குறைந்தபட்சம் ரூ.4,575-க்கும், கொட்டு பருத்தி அதிகபட்சம் ரூ.2,601-க்கும், குறைந்தபட்சம் ரூ.1,919-க்கும் ஏலம் போனது. இந்த சங்கத்தில் கடந்த ஆண்டு நவம்பர் முதல் பருத்தி ஏலம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இந்த ஏலத்தில் ஞாயிற்றுக்கிழமை ஒரே நாளில் 21 ஆயிரம் பருத்தி மூட்டைகள் ரூ.2.50 கோடிக்கு ஏலம்போனது சாதனையாக கருதப்படுகிறது.

கடந்த வாரத்தைக் காட்டிலும் 3 ஆயிரம் பருத்தி மூட்டைகள் கூடுதலாக ஏலத்துக்கு வந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

தினமலர்

**வெயிலின் தாக்கத்தால் விவசாயம் பாதிப்பு**

திருப்பூர் : வெயிலின் தாக்கம் அதிகரித்துள்ளதால், பயிர்களில் விளைச்சலை பாதிக்கிறது. தட்பவெப்ப நிலையை கருத்தில் கொண்டு, கிராமப்பகுதிகளில் உள்ள குளம், குட்டைகளுக்கு குழாய் மூலம் தண்ணீர் விட வேண்டும். தட்பவெப்ப நிலை மாற்றத்தால், வெப்ப நிலை உயர்ந்து, பயிர்களின் விளைச்சலில் மாற்றம் ஏற்பட்டு வருகிறது. கடந்தாண்டை விட, இந்தாண்டு அதிகமாக வெயில் கொளுத்துகிறது. பயிர்களை காக்க விவசாயிகள் சிரமப்படுகின்றனர்.

விவசாயிகள் கூறியதாவது: தட்ப வெப்ப நிலை மாற்றம், விவசாயிகளை அதிகளவில் பாதிக்கிறது. அதிக வெப்பத்தால், செடிகளில் பூ உதிர்வு ஏற்பட்டு, மகசூல் குறைகிறது. மற்ற காலங்களை விட, வெப்ப காலத்தில் காய்கறியை அதிகளவில் பச்சை புழுக்கள் தாக்குகின்றன. வாரம் ஒருமுறை நீர் பாய்ச்சும் நிலத்துக்கு, இரு முறை நீர் பாய்ச்ச வேண்டியுள்ளது. செடிகளில் கொழுந்து வாட்டம் காண்பதால், வளர்ச்சி பாதிப்படைகிறது. காலிபிளவர் நிறம் மாறுகிறது; தக்காளியின் பளபளப்பு குறை கிறது; கிழங்கு வகைகளின் அளவில் மாற்றம், மல்லி, கீரை வகைகள் முளைப்பதே சிரமம் என, பயிர்களின் தன்மையில் மாற்றத்தை  உருவாக்குகிறது.

திருப்பூர், பல்லடம், அவிநாசி சுற்றுப்பகுதிகளில் உள்ள கிராமங்களில் நிலத்தடி நீர் மட்டம் மிகவும் குறைந்து விட்டது. கிணற்று நீர் பற்றாக்குறை மற்றும் நிலத்தடி நீர் குறைந்து கிணறுகளில் தண்ணீர் இல்லாமையால், ஆழ்குழாய் கிணறுகளை ஏற்படுத்துகின்றனர். அதிகமான விவசாயிகள், ஆழ்குழாய் கிணறுகளை பயன்படுத்துவதால், நிலத்தடி நீர் முற்றிலும் குறைந்துவிட்டது; 1,000 அடி வரை சென்றாலும், போதிய நீராதாரம் பெற முடிவதில்லை.
பல இடங்களில் குடிநீருக்கே தட்டுப்பாடு ஏற்படும் சூழல் உள்ளது; விவசாயம் செய்வது கேள்விற்குரியதாகி விட்டது. தண்ணீர் பற்றாக்குறையால் விவசாய பரப்பளவு குறைந்து வருகிறது. கிராமப்பகுதிகளில் உள்ள குளம், குட்டைகளுக்கு குழாய் மூலம் தண்ணீர் விட வேண்டும். மழை காலங்களை தவிர்த்து, ஆண்டுக்கு மூன்று முறையாவது குளம், குட்டைகளுக்கு தண்ணீர் விட வேண்டும். போதிய நீராதாரத்தை ஏற்படுத்தினால், நிலத்தடி நீர் மட்டுமின்றி, பயிரிடுவதற்கு ஏற்ற சீதோஷ்ண நிலை உருவாகும். இவ்வாறு, விவசாயிகள் கூறினர்.

**உழவர் சந்தையில் ஒரே நாளில் 21,345 கிலோ காய்கறி விற்பனை**

தர்மபுரி: தர்மபுரி உழவர் சந்தையில் நேற்று ஒரே நாளில் 21, 345 கிலோ காய்கறிகள் விற்பனையானது.
தர்மபுரி உழவர் சந்தையில் வாரம் தோறும் சனி மற்றும் ஞாயிற்று கிழமைகளில் விற்பனை அதிகம் இருக்கும் நேற்று காரடையான் நோன்பு மற்றும் இன்று அமாவாசை என்பதால் வழக்கத்தை விட உழவர் சந்தையில் நுகர்வோர் கூட்டம் அதிகம் இருந்தது.
விற்பனையை அதிகரிக்கும் வாய்ப்பு இருந்ததால், வேளாண் விற்பனைக்குழு தலைவர் கோவிந்தசாமி, துணை வேளாண் அலுவலர் இளங்கோ, உதவி வேளாண் அலுவலர்கள் பழனி, நரசிம்மன் ஆகியோர் கூடுதல் காய்கறிகளை விவசாயிகளிடம் இருந்து கொண்டு வர ஏற்பாடு செய்திருந்தனர். நேற்று 21,345 கிலோ காய்கறிகள் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டன. 6,098 நுகர்வோர்கள் காய்கறிகளை வாங்கி சென்றனர். 108 விவசாயிகள் பங்கேற்றனர்.
இலக்கியம்பட்டியில் உழவர் சந்தை: தர்மபுரி நகரின் புறநகர் பகுதியில் உள்ள இலக்கியம்பட்டியில் உழவர் சந்தை அமைக்க வேளாண் விற்பனை குழு மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. முதல் கட்டமாக இதற்கான இடம்

தேர்வு செய்து மாவட்ட நிர்வாகத்தின் பார்வைக்கு எடுத்து சென்று ஒப்புதல் பெற்று அரசின் பரிந்துரைக்கு அனுப்பி வைக்கப்பட்டு, உழவர் சந்தை பணிகள் துவங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**விவசாயிகளுக்கு பயிற்சி முகாம்**

குஜிலியம்பாறை : குஜிலிம்பாறை வட் டார வேளாண் மையத்தின் சார்பில், விவசாயிகளுக்கான எண்ணெய் வித்து பயிற்சி முகாம் ராமகிரியில் நடந்தது.துணை இயக்குநர் துரைராஜ் தலைமை வகித்தார்.
ஐசோபியம் எண்ணெய் வித்து உற்பத்தி திட்டத்தின் கீழ் நடந்த பயிற்சி முகாமில், நிலக்கடலை, சூரியகாந்தி, எள், ஆமணக்கு உள்ளிட்ட எண்ணெய் வித்து பயிர்களில், கூடுதல் மகசூல் பெறுவதற்கான நவீன தொழில் நுட்பங்கள் பற்றி விளக்கப்பட்டது. மானிய திட்டங்கள், உயிர் உரங்கள், தெளிப்பு கருவிகள் அமைத்தல், நுண்ணுயிர் கரைசல் தெளிப்பு பற்றி விளக்கப்பட்டது. விதைசான்று உதவி இயக்குநர் செல்வன், குஜிலியம்பாறை வேளாண் மை உதவி இயக்குநர் ரவிபாரதி, வேளாண் அலுவலர்கள் ரவிச்சந்திரன், சந்திரகலா, செந்தில்வடிவு, சேகர், பத்ரி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**மைலம்பாடியில் ரூ. 2.5 லட்சத்துக்கு எள் ஏலம்**

அந்தியூர்: மைலம்பாடி ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் இந்த வாரம் நடந்த எள் ஏலத்தில் ரூ. 2.5 லட்சத்துக்கு விற்பனையானது. மைலம்பாடி ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் இந்த வாரம் எள் ஏலம் நடந்தது. எள் சீஸன் முடிந்து விட்ட நிலையில், விற்பனை கூடத்துக்கு எள் வரத்து குறைந்து வருகிறது. எள் சீஸன் இருக்கும் போது, ஒரு நாளைக்கு ரூ. 1 கோடிக்கு மேல் ஏலம் நடக்கும். மைலம்பாடி, மேட்டூர், சென்னம்பட்டி, பட்லூர், ஒலகடம் போன்ற பகுதிகளிலிருந்து விவசாயிகள் எள் கொண்டு வருகின்றனர். இவற்றை ஏலம் எடுக்க கர்நாடகா, முத்தூர், ஈரோடு, வெள்ளகோவில், தாராபுரம், ராமநாதபுரம் போன்ற இடங்களிலிருந்து வியாபாரிகள் வருகின்றனர்.
இந்த வாரம் நடந்த ஏலத்தில் குறைவாக 80 மூட்டைகள் மட்டும் வந்திருந்தன. அதிகபட்சமாக கிலோ ரூ. 58.09 க்கும், குறைந்தபட்சம் ரூ. 47.09 க்கும் விற்பனையானது. இவற்றின் மொத்த மதிப்பு ரூ. 2.5 லட்சம்.

**'காளிபிளவர்' விலையில் கடும் வீழ்ச்சி : தேனி மாவட்ட விவசாயிகள் கவலை**

தேனி : தேனி மாவட்டத்தில் "காளிபிளவர்' விலை கடும் வீழ்ச்சியடைந்துள்ளது. அதேசமயம் வெளி மார்க்கெட்டில் பல மடங்கு விலைஉயர்த்தி இடைத்தரகர்கள் கொள்ளை லாபம் சம்பாதித்து வருகின்றனர்.
தேனி மாவட்டத்திலுள்ள சின்னமனூர், அய்யம்பட்டி, மார்க்கம்பட்டி, குச்சனூர், தேனி சுற்றுவட்டாரங்கள் மற்றும் பல்வேறு கிராமங்களில் "காளிபிளவர்' பயிரிடப்பட்டுள்ளது. கேரளா மற்றும் தமிழகத்தின் பல்வேறு மாவட்ட பகுதிகளுக்கு பூ விற்பனைக்கு கொண்டு செல்லப்படுகிறது.

விலை வீழ்ச்சி: சீசன் இருப்பதால், தற்போது காளிபிளவர் அதிக அளவில் உற்பத்தி ஆகியுள்ளது. ஒரு பூ 45 காசு முதல் 75காசுக்கு விவசாயிகளிடம் கொள்முதல் செய்யும் வியாபாரிகள், வெளி மார்க்கெட்டில் ஜோடிக்கு சிறிய பூவை எட்டு ரூபாய் வரையிலும், பெரிய பூவை 15 ரூபாய் வரையிலும் விற்பனை செய்கின்றனர். இது தேனி மாவட்ட காளிபிளவர் உற்பத்தி செய்யும் விவசாயிகள் மத்தியில் கடும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

அய்யம்பட்டியை சேர்ந்த விவசாயி சேகர் கூறுகையில், காளிபிளவர் விற்பனையில் இடைத்தரகர்கள் தலையீட்டால், விவசாயிகளும், பொதுமக்களும் கடுமையாக பாதிக்கப்பட்டு வருகின்றனர். ஒரு பூவை உற்பத்தி செய்ய ஒரு ரூபாய் வரை செலவாகிறது. சென்ற மாதம் வரை பனிக்காலத்தில் விளைச்சல் பாதிக்கு பாதியாக குறைந்தது.

பூக்களின் அளவும் சிறிதாக இருந்ததால், விலை கிடைக்கவில்லை. தற்போது பூ விளைச்சல் நன்றாக இருந்தும், இடைத்தரகர்கள் புகுந்து, பூவை 45 காசு முதல் 75காசு வரை குறைத்து அடிமாட்டு விலைக்கு வாங்குகின்றனர். வெளியில் பல மடங்கு விலை உயர்த்தி விற்கின்றனர். தேனி உழவர்சந்தைக்கு சென்றால், அங்கும் இடைத்தரகர்கள் ஆக்கிரமிப்பு இருக்கிறது. அவர்கள் பிடியில் சந்தை இருப்பதால், அடிமாட்டு விலைக்கு பூக்களை கொடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படாத வகையில் விலை கிடைக்கவும், இடைத்தரகர்களின் தலையீட்டை தடுக்கவும், சம்மந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

**வல்லம் பகுதி ஏரிப்பாசன விவசாயிகள் நெல் அறுவடை பணி தீவிரம்**

வல்லம்: வல்லம் பகுதி ஏரிப்பாசன விவசாயிகள் நெல் அறுவடை பணியில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.
வல்லம் பகுதியில் நாட்டாணி, வல்லம் புதூர், குரும்பூண்டி, சவேரியார்பட்டி, தச்சன்குறிச்சி உட்பட பல்வேறு கிராமங்களில் ஏரிப்பாசனம் மூலம் நெல் பயிர் சாகுபடி செய்யப்பட்டது. இப்பகுதிகளில் வடகிழக்கு பருவ மழை அதிகளவில் பெய்தால் ஏரிகள் நிரம்பி வழியும். இதன்மூலம் இப்பகுதி விவசாயிகள் நெல் பயிர் சாகுபடி செய்து வருகின்றனர்.

இந்தாண்டு பெய்த வடகிழக்கு பருவமழையில் இப்பகுதியில் உள்ள ஏரிகள் நிரம்பின. அந்த தண்ணீரைக் கொண்டு இப்பகுதியில் 500 ஏக்கர் அளவில் நெல் பயிர் சாகுபடி செய்யப்பட்டது. கடைசி கட்டத்தில் தண்ணீர் பற்றாக் குறை ஏற்பட்டதால் சில விவசாயிகள் ஆயில் மோட்டார் இன்ஜின் மூலம் தண்ணீர் இறைத்து பயிரை காப்பாற்றினர். 100 நாள் வேலை திட்டத்தால் விவசாயக் கூலி ஆட்கள் கிடைக்காமல் அறுவடை பணியில் தொய்வு ஏற்பட்டது. இதனால் விரக்தியடைந்த விவசாயிகள் இயந்திரம் மூலம் அறுவடை பணிகளை மேற் கொண்டு வருகின்றனர். தற்போது இப்பகுதியில் நெல் அறுவடை பணி மும்முரமாக நடக்கிறது. ஆனால் மகசூல் குறைவாகவே உள்ளதாக விவசாயிகள் வேதனை தெரிவித்தனர்.

**மண் புழு உரம் தயாரிப்பு ஒரு நாள் பயிற்சி முகாம்**

பட்டுக்கோட்டை: பட்டுக்கோட்டை அடுத்த வேப்பங்குளம் தென்னை ஆராய்ச்சி நிலையத்தில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் மூலம் செயல்படும் நீர்வள, நிலவள திட்டத்தின் கீழ் அக்னியாறு உபவடிநில பகுதி விவசாயிகளுக்கு மண்புழு உரம் தயாரிப்பது குறித்த ஒரு நாள் பயிற்சி வழங்கப்பட்டது.
தென்னை ஆராய்ச்சி நிலைய தலைவர் பேராசிரியர் வைத்திலிங்கம் தலைமை வகித்து பேசியதாவது:
மண் புழுக்களுக்கு உகந்த கழிவுகள், மண் புழுக்களின் தன்மைகள், புழு வகைகள் மற்றும் மண்புழு உர உற்பத்திக்கான இடத்தை தேர்வு செய்வது குறித்து விவசாயிகள் இப்பயிற்சியில் நன்கு அறிய வேண்டும்.

மண் புழுக்களை பயன்படுத்துவதால் சுற்றுபுறச்சூழல் தூய்மையானதாகவும், பயிர் உற்பத்தி திறன் அதிகரிக்கவும், நிலம், நீர் மற்றும் காற்று மாசுபடாமலும் இருக்க வாய்ப்புள்ளது. மண் புழு தாயாரிக்கும் இடம் பனி, வெயில், மழை படாதபடியும், நிழலான இடத்தை தேர்ந்து எடுக்க வேண்டும். மண் புழுக்கள் விவசாயிகளின் நண்பனாக இருப்பதால் அவற்றை அதிக அளவில் உற்பத்தி செய்ய வேண்டும். இயற்கை களை வெட்டியாக இருப்பதால் விவசாயிகள் தங்கள் நிலங்களில் மண் புழுக்களின் உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் தொழில் நுட்பங்களை கையாள வேண்டும்.
இவ்வாறு அவர் பேசிவனார்.
உழவியல் பேராசிரியர் சுப்ரமணியம், "தங்கள் வயல்களில் கிடைக்கும் கழுவுகள் மற்றும் மண் புழுக்களையும் கொண்டு மண்புழு தயாரிக்கும் முறை,' குறித்து விளக்கினார்.

இத்திட்டத்தின் பொறுப்பு விஞ்ஞானி பேராசிரியர் மோகன்தாஸ் மண்குழி, சிமெண்ட் தொட்டி அமைத்து மண்புழு உரம் தயாரிக்கும் முறைகளை பயிற்சியளித்தார்.

சிமெண்ட் தொட்டிகள் சில்பானின் பை 250 ஜி.எஸ்.எம்., அளவில் கனமானதும், 12 * 4 * 2 என்ற அடியாளவிலும், நான்கு கிலோ எடையாகவும் இருக்க வேண்டும். நான்கு புறமும் மூங்கில் சவுக்கு குச்சிகளை கொண்டு சில்பானின் தொட்டியை அமைக்க வேண்டும். தொட்டியின் அடிப்பகுதியில் தேங்காய் நார் அரையடி உயரத்துக்கும், மக்கக்கூடிய கழிவுப்பொருட்கள் மற்றும் சானத்தை அரையடி உயரத்துக்கும் இருக்குமாறு மாறிமாறி சில்பானின் பையை நிரப்ப வேண்டும். இ தில், பிளாஸ்டிக், குச்சிகள், கற்க ள் இல்லாத வகையில் பார்த்துக் கொள்ள வேண்டும். அதன் பின் மண் புழுக்களை அதில் இடவேண்டும் என விளக்கம் அளித்தனர். மேலும், விவசாயிகளின் கேள்விகளுக்கு நிலைய விஞ்ஞானிகள் விளக்கம் அளித்தனர்.
பட்டுக்கோட்டை, திருவோணம், கற்பக்குடி, கந்தர்வக்கோட்டை, சேதுபவாசத்திரம் மற்றும் பேராவூரணி பகுதியை சேர்ந்த 50க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**பண்ணைசாரா கடன் வட்டி, சலுகை தள்ளுபடி பெற விவசாயிக்கு அழைப்பு**

தஞ்சாவூர்: ""பண்ணைசாரா கடனுக்கான வட்டி, சலுகை தொகைகளை அரசு தள்ளுபடி செய்துள்ளதால் மார்ச் 31ம் தேதிக்குள் பயன்பெற," கூட்டுறவு மண்டல இணைப்பபதிவாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

கூட்டுறவு வங்கிகளில் சிறு வணிகப் போக்குவரத்து கடன், கைத்தறி கடன், விசைத்தறி கடன், தொழிற்கடன், வாணிபக்கடன் போன்ற பண்ணைசாராக் கடன்கள் பெற்ற உறுப்பினர்களின் கடன் சுமையை குறைக்கும் நோக்குடன் தமிழக அரசு சிறப்பு கடன் தீர்வுத்திட்டத்தை அறிவித்துள்ளது.

இத்திட்டம் தஞ்சை மாவட்டத்தில் உள்ள அனைத்து கூட்டுறவு வங்கிகள் மற்றும் அதன் கிளைகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் கிடைக்கப்பெறும் வட்டிச் சலுகைகள் குறித்து, பண்ணைசாராக்கடன் பெற்று நிலுவை வைத்துள்ள உறுப்பினர்களுக்கு அஞ்சல் மூலம், நேரடியாக, பத்திரிகை செய்தி வாயிலாக ஏற்கனவே தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சிறப்பு கடன் தீர்வு திட்டத்தின் கீழ் பயன்பெறக்கூடிய வகையில் 12 ஆயிரத்து 754 உறுப்பினர்கள் உள்ளனர். இத்தகைய கடன்தாரர்கள் ஏற்கனவே நடைமுறையில் உள்ள வட்டி விகிதங்களின் கீழ் 25 கோடி அளவுக்கு கடன் செலுத்த வேண்டியுள்ளது. தமிழக அரசின் இச்சிறப்பு கடன் தீர்வுத்திட்டத்தால் பெருமளவு வட்டிச்சுமை குறைந்து 12 கோடி அளவுக்கு செலுத்தினால் போதுமானது என்ற சாதகமான வழிவகை தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் இதுநாள் வரை ஆயிரத்து 910 உறுப்பினர்கள் ஒரு கோடியே 62 லட்சத்து 27 ஆயிரம் செலுத்தி ஒரு கோடியே 84 லட்சத்து 27 ஆயிரம் வட்டி, அபராத வட்ட மற்றும் இதர செலவினங்கள் தள்ளுபடி பெற்று பயனடைந்துள்ளனர். எனவே, இத்திட்டத்தின் கீழ் இதுவரை கடனை திரும்பி செலுத்தாதவர்கள் அனைவரும் 2010 மார்ச் 31ம் தேதிக்குள் தாங்கள் செலுத்த வேண்டிய பண்ணைசாராக் கடன் நிலுவை தொகையை தொடர்புடைய கூட்டுறவு வங்கியில் முழுமையாக செலுத்தி அபராத வட்டி, இதர செலவுத்தொகைகளை தள்ளுபடியாக பெற்று பயனடையலாம். மார்ச் 31ம் தேதிக்குள் கடனை திரும்ப செலுத்தாத கடன்தாரர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது. மேலும், இதுதொடர்பாக கூடுதல் விபரங்களுக்கு தாங்கள் பண்ணைசாரா கடன் பெற்றுள்ள நகர கூட்டுறவு வங்கிகள், மத்திய கூட்டுறவு வங்கிகள் மற்றும் அதன் கிளைகள், தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும்

ஊரக வளர்ச்சி வங்கிகள், நகர கூட்டுறவு கடன் சங்கம் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் ஆகியவைகளை நேரில் அணுகலாம், என கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் சிவாஜி கேட்டுக் கொண்டார்.

**விளாத்திகுளத்தில் பயிறு சாகுபடி தொழில்நுட்ப பயிற்சி**

விளாத்திகுளம் : விளாத்திகுளத்தில் விவசாயிகளுக்கு பயிறு சாகுபடி தொழில்நுட்ப பயிற்சி நடந்தது.
விளாத்திகுளம் வேளாண்மை விரிவாக்க மைய வளாகத்தில் விவசாயிகளுக்கு பயிறு சாகுபடி பற்றிய தொழில்நுட்ப பயிற்சி இரண்டு நாட்கள் நடந்தது. பயிற்சியில் பயிறு சாகுபடி தொழில்நுட்பங்கள், பயிறுவகைகளை தாக்கும் பூச்சிகள் பற்றியும், அதனை கட்டுப்படுத்தும் முறைகள், ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகள், உரநிர்வாகம் செய்து பயிறு மகசூலை பெருக்குதல் மற்றும் ஐசோபாம் திட்டம் பற்றியும் விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. வேளாண்மை உதவி இயக்குநர் கருப்பசாமி, கோவில்பட்டி வேளாண்மை ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் சுப்பிரமணியன், பூச்சியியல் பேராசிரியர் ராமமூர்த்தி, உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை உதவி இயக்குநர் குருமூர்த்தி, வேளாண் அலுவலர் மோகன் ஆகியோர் பயிற்சி அளித்தனர். வேளாண்மை உதவி அலுவலர்கள் செயல் விளக்கம் செய்து காண்பித்தனர். பயிற்சியில் 50க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். ஏற்பாடுகளை துணை வேளாண் அலுவலர் முத்தையா செய்திருந்தார்.

**கரும்பு உற்பத்தி உயர்ந்ததால் நெல் விளைச்சல் பாதிப்பு**

திருக்கோவிலூர் : திருக்கோவிலூர் பகுதியில் விவசாயிகள் ஒட்டு மொத்தமாக கரும்பு பயிருக்கு மாறியதால் நெல் உற்பத்தி குறையும் அபாயம் ஏற்பட்டுள்ளது.
திருக்கோவிலூர் பகுதி விவசாயிகள் நெல், கரும்பு, மணிலா, வாழை அதிகம் பயிர் செய்வது வழக்கம். நான்கு ஆண்டுகளுக்கு முன் கரும்புக்கு 1000 ரூபாய் என அரசு கூடுதல் விலையை அறிவித்ததால் ஒட்டு மொத்த விவசாயிகளும் கரும்பு பயிர் செய்ய துவங்கினர். தனியார் ஆலைகள் அரசு விலையை விட கூடுதலாக விலை கொடுப்பதாக கூறியதை நம்பி விவசாயிகள் ஒட்டு மொத்தமாக கரும்பு நடவு செய்தனர்.

அப்போது நெல் உற்பத்தி குறைந்து நெல்லின் விலை அதிகரித்திருந்தது. கரும்பு பயிர் செய்து பாதித்த விவசாயிகள் மொத்தமாக நெல்லுக்கு தாவினர். அரசு ஒரு ரூபாய் அரிசி திட்டத்தை அறிவித்து நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பில் நேரடி நெல் கொள் முதல் நிலையங்களை திறந்து விவசாயிகளிடமிருந்து நேரடியாக அரசு நெல் கொள்முதல் செய்தது. நெல்லின் விலை உயர்ந்ததால் விவசாயிகளும் மகிழ்ச்சியுடன் நெல் பயிர் செய்தனர். தொடர்ந்து கரும்பு உற்பத்தி குறைந்து, சர்க்கரையின் விலை உயர்ந்தது.

சர்க்கரை உற்பத்தியை அதிகரிக்க அரசு தனியார் ஆலைகளுக்கு அனுமதி வழங்கியது. இவை சர்க் கரை உற்பத்தியை மட்டும் நோக்கமாக கொள்ளாமல் மின்சாரம், மொலாசஸ், பேப்பர் உற்பத்திக்கு தேவையான மூலப் பொருட்களை தயார் செய்யும் நவீன தொழில் நுட்பத்துடன் ஆலை களை துவக் கியது. இதனால் கூட்டுறவு ஆலைகளை விட விவசாயிகளுக்கு கூடுதல் விலை கொடுத்து கரும்பை வாங்கும் நிலை உருவானது.

திருக்கோவிலூர் பகுதிக்கு மட்டும் 2 தனியார் ஆலைகளுக்கு அரசு அனுமதி வழங்கியது. ரிஷிவந்தியம் அடுத்த கலையநல்லூரில் ஒரு ஆலையும், திருக்கோவிலூர் அடுத்த கீழத்தாழனூரில் ஒரு ஆலையும் துவங்கப்பட்டுள்ளது. இதில் கலையநல்லூர் ஆலை ஏற்கனவே உற்பத்தி யை துவக்கி விட்டது. கீழத்தாழனூர் ஆலை விரைவில் துவக்கவுள்ளது. இந்த ஆலைகளுக்கான கரும்பு நடவு செய்யும் பகுதியை அரசு ஒதுக்கிய தால் கரும்பு தடையின்றி ஆலைக்கு கிடைக்க

தனியார் ஆலை நிர்வாகம் விவசாயிகளை நேரடியாக  ஊக்குவித்து வருகிறது.  இதனால் நெல், மணிலா, வாழை என பயிர் செய்த இடங்கள் எல் லாம் இன்று ஒட்டு மொத்தமாக கரும்பு பயிராக மாறியுள்ளது. வரும் ஆண்டில் நெல் உற்பத்தி குறையும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

**விவசாயிகள் பயிலரங்கம்**

திருவெண்ணெய்நல்லூர் : திருவெண்ணெய்நல்லூரில் திருக்கோவிலூர் அணைக்கட்டு திட்ட பாசன விவசாயிகள் பயிலரங்கம் நடந்தது.
வேளாண் பொறியியல் துறை சார்பில் நடந்த பயிலரங்கத்திற்கு  கண்காணிப்பு பொறியாளர் அரங்கராஜன் தலைமை தாங்கினார். செயற்பொறியாளர் காதர்மைதீன் முன்னிலை வகித்தார். உதவி செயற்பொறியாளர் ஸ்ரீராமன்பன்னீர்செல்வம் வரவேற்றார். செயற்பொறியாளர்கள் கிருஷ்ணமூர்த் திசுகுமார், பழனிசாமி, வேளாண் இணை இயக்குனர் ராமலிங்கம், தோட்டக்கலை துணை இயக்குனர் தண்டபாணி, பேராசிரியர் ராமமூர்த்தி பேசினர். மீன்வளத்துறை உதவி இயக்குனர் கலியமூர்த்தி, பெரியசாமி, பாண்டியன், தசரதன்,முருகன் உட் பட பலர் கலந்து கொண்டனர். உதவி செயற்பொறியாளர் சுப்ரமணியன் நன்றி கூறினார்.

**செம்மை நெல் சாகுபடி அறுவடை விழா துவக்கம்**

செஞ்சி : திருவம்பட்டில் நீர் வள, நில வள திட்டத்தின் கீழ் செம்மை நெல் சாகுபடி அறுவடை விழாவை கலெக்டர் துவக்கி வைத்தார்.
செஞ்சி தாலுகா திருவம்பட்டு கிராமத்தில் செல்வகுமாரன் என்பவரது நிலத்தில் நீர் வள , நில வள திட்டத்தின் கீழ் செம்மை நெல் சாகுபடி அறுவடை விழா மற்றும் மாவட்ட அளவிலான பயிர் விளைச் சல் போட்டி நடந்தது.  கலெக்டர் பழனிசாமி தலைமை தாங்கி செம்மை நெல் அறுவடையை துவக்கி வைத்து பேசினார். வேளாண் இணை இயக்குனர் ராமலிங்கம் முன் னிலை வகித்தார்.வல்லம் வட்டார வேளாண் உதவி இயக்குனர் துரைசாமி வரவேற்றார். முன்னதாக நீர்வள , நில வள திட்டம் குறித்து சைக்கிள் பேரணி நடந்தது. டான்வா குழுவினருக்கு பாசன கருவிகள், கைத்தெளிப்பான்களை 50 சதவீதம் மானியத்தில் கலெக்டர் வழங்கினார்.
 திண்டிவனம் வேளாண் பொறியியல் உதவி இயக்குனர் சிவகுரு, வேளாண் விற்பனை துறை அலுவலர் பெரியசாமி,வல்லம் ஒன்றிய  தோட்டக்கலை அலுவலர் சீனிவாசன், ஊராட்சி தலைவர் உஷாராணி, விவசாயிகள் ஏழுமலை, ராஜேந்திரன் உட் பட பலர் கலந்து கொண் டனர்.  வல்லம் வட்டார வேளாண் அலுவலர் சரவணன் நன்றி கூறினார்.

**சூரியகாந்தி வயலில் செயல் விளக்க பயிற்சி**

திண்டிவனம் : திண்டிவனம் எண் ணெய் வித்து ஆராய்ச்சி நிலையத்தில் சூரியகாந்தி வயலில் வேளாண் பட்டய பயிற்சி முதலாம் ஆண்டு மாணவர்களுக்கு செயல் விளக்க பயற்சி முகாம் நேற்று நடந்தது.
திண்டிவனத்தில் எண் ணைவித்து ஆராய்ச்சி நிலையம், வேளாண் அறிவியல் நிலையம், வேளாண் பட்டய பயிற்சி மையம் ஆகியவை 200 ஏக்கர் பரப்பளவில் செயல்பட்டு வருகிறது. வேளாண் பட் டையை பயிற்சி படித்து வரும் முதலாம் ஆண்டு மாணவர் களுக்கு சூரியகாந்தி பூக்களில்  அதிக விதைகள் பிடிப்பதற்கு மேற் கொள்ள வேண்டிய வழிமுறைகள் குறித்த செயல் விளக்க பயிற்சி முகாம் எண்ணெய் வித்து ஆராய்ச்சி நிலையத்திற்குச் சொந்தமான பண்ணையில் பயிரிட் டுள்ள சூரிய காந்தி பயிர் வயலில் நடந்தது. எண் ணெய் வித்து ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் மனோகரன் பயிற்சியளித்தார்.

**வெயிலின் தாக்கத்தால் விவசாயம் பாதிப்பு**

திருப்பூர் : வெயிலின் தாக்கம் அதிகரித்துள்ளதால், பயிர்களில் விளைச்சலை பாதிக்கிறது. தட்பவெப்ப நிலையை கருத்தில் கொண்டு, கிராமப்பகுதிகளில் உள்ள குளம், குட்டைகளுக்கு குழாய் மூலம் தண்ணீர் விட வேண்டும். தட்பவெப்ப நிலை மாற்றத்தால், வெப்ப நிலை உயர்ந்து, பயிர்களின் விளைச்சலில் மாற்றம் ஏற்பட்டு வருகிறது. கடந்தாண்டை விட, இந்தாண்டு அதிகமாக வெயில் கொளுத்துகிறது. பயிர்களை காக்க விவசாயிகள் சிரமப்படுகின்றனர்.

விவசாயிகள் கூறியதாவது: தட்ப வெப்ப நிலை மாற்றம், விவசாயிகளை அதிகளவில் பாதிக்கிறது. அதிக வெப்பத்தால், செடிகளில் பூ உதிர்வு ஏற்பட்டு, மகசூல் குறைகிறது. மற்ற காலங்களை விட, வெப்ப காலத்தில் காய்கறியை அதிகளவில் பச்சை புழுக்கள் தாக்குகின்றன. வாரம் ஒருமுறை நீர் பாய்ச்சும் நிலத்துக்கு, இரு முறை நீர் பாய்ச்ச வேண்டியுள்ளது. செடிகளில் கொழுந்து வாட்டம் காண்பதால், வளர்ச்சி பாதிப்படைகிறது. காலிபிளவர் நிறம் மாறுகிறது; தக்காளியின் பளபளப்பு குறை கிறது; கிழங்கு வகைகளின் அளவில் மாற்றம், மல்லி, கீரை வகைகள் முளைப்பதே சிரமம் என, பயிர்களின் தன்மையில் மாற்றத்தை உருவாக்குகிறது.

திருப்பூர், பல்லடம், அவிநாசி சுற்றுப்பகுதிகளில் உள்ள கிராமங்களில் நிலத்தடி நீர் மட்டம் மிகவும் குறைந்து விட்டது. கிணற்று நீர் பற்றாக்குறை மற்றும் நிலத்தடி நீர் குறைந்து கிணறுகளில் தண்ணீர் இல்லாமையால், ஆழ்குழாய் கிணறுகளை ஏற்படுத்துகின்றனர். அதிகமான விவசாயிகள், ஆழ்குழாய் கிணறுகளை பயன்படுத்துவதால், நிலத்தடி நீர் முற்றிலும் குறைந்துவிட்டது; 1,000 அடி வரை சென்றாலும், போதிய நீராதாரம் பெற முடிவதில்லை.
பல இடங்களில் குடிநீருக்கே தட்டுப்பாடு ஏற்படும் சூழல் உள்ளது; விவசாயம் செய்வது கேள்விற்குரியதாகி விட்டது. தண்ணீர் பற்றாக்குறையால் விவசாய பரப்பளவு குறைந்து வருகிறது. கிராமப்பகுதிகளில் உள்ள குளம், குட்டைகளுக்கு குழாய் மூலம் தண்ணீர் விட வேண்டும். மழை காலங்களை தவிர்த்து, ஆண்டுக்கு மூன்று முறையாவது குளம், குட்டைகளுக்கு தண்ணீர் விட வேண்டும். போதிய நீராதாரத்தை ஏற்படுத்தினால், நிலத்தடி நீர் மட்டுமின்றி, பயிரிடுவதற்கு ஏற்ற சீதோஷ்ண நிலை உருவாகும். இவ்வாறு, விவசாயிகள் கூறினர்.

**விவசாய துறைக்கு முக்கியத்துவம் : அமைச்சர் சிதம்பரம் தகவல்**

சிவகங்கை : ""விவசாய துறைக்கு வரும் ஆண்டில் மூன்று லட்சத்து 75 ஆயிரம் கோடி ரூபாய் கடன் வழங்கப்படும்,'' என உள்துறை அமைச்சர் சிதம்பரம் பேசினார்.  சிவகங்கை மாவட்டம் தமராக்கியில் சிண்டிகேட் வங்கி கிளை திறப்பு விழா நடந்தது. நிர்வாக இயக்குனர் பசந்த்சேத் முன்னிலை வகித்தார். கிளை மேலாளர் ஆறுமுகம் வரவேற்றார்.
திறந்து வைத்த அமைச்சர் பேசியதாவது: இவ்வங்கியில் 39 ஆயிரம் கோடி ரூபாய் டிபாசிட் உள்ளது. கடனாக 6, 214 கோடி வழங்கியுள்ளது. இக்கிராமத்தில் அனைவரும் வங்கி கணக்கு துவங்க வேண்டும். நாடு முழுவதும் கடந்த ஆண்டு மூன்று லட்சத்து 25 ஆயிரம் கோடி ரூபாய், விவசாய கடன் வழங்கப்பட்டது. நடப்பு ஆண்டில் மூன்று லட்சத்து 75 ஆயிரம் கோடி கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கடனுக்கு ஆறு சதவீத வட்டி வசூலிக்கப்படுகிறது. வரும் ஆண்டு முதல், தவணை தவறாமல் கடன் செலுத்தும் விவசாயிகளுக்கு ஐந்து சதவீத வட்டி வசூலிக்கப்படும். தமிழக கூட்டுறவு வங்கிகளில், விவசாய கடனை தவணை தவறாமல் செலுத்துவோருக்கு, வட்டி கிடையாது. மத்திய, மாநில அரசுகள்  விவசாய துறைக்கு முக்கியத்துவம் அளிக்கின்றன என்றார்.
கலெக்டர் மகேசன் காசிராஜன், வங்கி செயல் இயக்குனர் ராமச்சந்திரன், துணை பொதுமேலாளர் சுரேந்திரன், உதவி பொது மேலாளர் இந்திரஜித், எம்.எல்.ஏ., க்கள் சுந்தரம், ராமசாமி பங்கேற்றனர்.

## நீலகிரி மாவட்டத்தில் தேயிலை செடிகளில் சிவப்பு சிலந்தி நோய் தாக்கும் அபாயம்

குன்னூர், மார்ச்.15–

நீலகிரி மாவட்டத்தில் வெயிலின் தாக்கம் அதிகரித்து உள்ளதால் தேயிலை செடிகளில் சிவப்பு சிலந்தி நோய் தாக்குதல் ஏற்படும் அபாயம் உள்ளது.

பலத்த மழை

கடந்த 2009–ம் ஆண்டு நவம்பர், டிசம்பர் ஆகிய மாதங்களில் நீலகிரி மாவட்டத்தில் பலத்த மழை பெய்தது. தமிழகத்திலேயே நீலகிரி மாவட்டத்தில் தான் அதிகமான மழை பெய்தது.

குறிப்பாக குன்னூர் மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் மழை அதிகம் இருந்தது. இதன் காரணமாக குன்னூர் பகுதியில் மேகமூட்டம் தொடர்ந்து நிலவி வந்தது. மேக மூட்டத்தின் காரணமாக கடும் குளிரால் பொது மக்கள் அவதியுற்றனர்.

கோடை காலம்

இந்த அண்டில் ஜனவரி மாதத்திலும் மழை இருந்தது. அதன் பின்னர் மழை இல்லா மல் பனி பெய்து வந்தது. ஆண்டுதோறும் மார்ச் மாதத்தின் 3–வது வாரத்தில் தான் கோடை காலம் தொடங் கும்.ஆனால் இந்த ஆண்டு வழக்கத்துக்கு மாறாக பிப்ரவரி மாதமே கோடை காலம் தொடங்கியது. மாவட்டத்தில் நிலவிய கடும் வெயிலால் பெய்த மழையின் ஈரம் வெயிலின் காரணமாக படிப் படியாக குறைந்தது.

சிறிய மழை

கடந்த பிப்ரவரி மாதம் 24–ந் தேதி சிறிது நேரம் மழை பெய்தாலும், தொடர் மழை இல்லாத காரணத்தால் செடி, கொடிகள் வெயிலின் தாக்கத்தி னால் காய்ந்து விட்டன. கடும் வெயில் நிலவுவதால் நீர் பாசன வசதி இல்லாத நிலங் களில் உள்ள விவசாய பயிர்கள் காய்ந்த நிலையில் உள்ளன.

தேயிலை செடிகள் வெயி லினால் காய்ந்து மகசூல் குறை வடைந்துள்ளது. பாறைகள் உள்ள இடங்களில் உள்ள தேயிலை செடிகள் கருகி விட்டன. நிலத்தில் ஈரம் இல்லாத காரணத்தால் தேயிலை செடிகளில் சிறிய அரும்புகள் வளர முடியாத நிலையில் உள்ளன.

நோய் தாக்கும் அபாயம்

வெயிலின் காரணமாக தேயிலை செடிகளை சிவப்பு சிலந்தி நோய் தாக்கும் அபாயம் இருந்து வருகிறது. காய்கறி பயிர்களிலும், பல்வேறு நோய்கள் ஏற்பட்டு வருகின்றன.

விவசாயிகள் மழையை எதிர்நோக்கியுள்ள வேளை யில் குடிநீருக்கும் தட்டுப்பாடு ஏற்படும் நிலை உருவாகி வருகிறது. அணைகளின் நீர்மட்டம் வேகமாக குறைந்து வருவதால், வழக்கமாக பொது மக்களுக்கு வினியோகிக்கப் படும் குடிநீரின் அளவு குறைக் கப்பட்டு வருகிறது. விவசாய பயிர்களை காப்பாற்றவும், குடிநீர் தட்டுப்பாட்டை போக்கவும் மழை எப்போது வரும் என்று பொது மக்களும், விவசாயிகளும் எதிர்பார்த்து உள்ளனர்.

## கொலக்கம்பை பகுதிகளில்

# பீன்ஸ் பயிரிட ஆர்வம் காட்டும் சிறு விவசாயிகள்

கொலக்கம்பை,மார்ச்.15-

கொலக்கம்பை பகுதிகளில் பீன்ஸ் பயிரிட சிறு விவசாயிகள் அதி களவு ஆர்வம் காட்டி வருகின்றனர்.

### விலை வீழ்ச்சி

நீலகிரி மவட்டத்தின் பணப் பயிராக விளங்கி வந்தது தேயிலை பயிர் தான். கடந்த சில ஆண்டுகளுக்கு முன் பச்சை தேயிலை பெரும் விலை வீழ்ச்சி அடைந்தது. இதனால் விவசாயிகள் மாவட்டத்தில் பல்வேறு போராட்டங்களை நடத்தினார்கள்.

அதனை தொடர்ந்து தேயிலை வாரியம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்தது. தேயிலை தூளின் தரம் உயர்த்த கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதனால் நீலகிரியின் தேயிலை தூள் விலை உயர்ந்தது. தேயிலை விவசாயிகளுக்கும் நல்ல விலை கிடைத்து வந்தது.

### கென்யா, இலங்கை

தற்போது கென்யா மற்றும் இலங்கை போன்ற நாடுகளில் வறட்சி மறைந்து தேயிலை தூள் உற்பத்தி தொடங்கியுள்ளது. இதனால் நீலகிரி மாவட்டத்தின் தேயிலை தூள் மறுபடியும் விலை வீழ்ச்சி அடைந்து வருகிறது.

எனவே இதனை நம்பி இருந்த சிறு, குறு தேயிலை விவசாயிகள் பெரும் பொருளாதார சிக்கலை சந்திக்கும் சூழ்நிலை உருவாகி உள்ளது.

தேயிலை தூள் விலை வீழ்ச்சியால் நீலகிரி மாவட்டத்தில் உள்ள அனைத்து தரப்பு மக்களும் நேரடியாகவும், மறைமுகமாகவும் பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

### பீன்ஸ்

இதன் காரணமாக தேயிலை விவசாயிகள் மலை காய்கறிகள் பயிரிடுவதில் அதிக ஆர்வம் காட்ட ஆரம்பித்துள்ளனர். கொலக்கம்பை மற்றும் தூதூர் மட்டம், டெராமியா, சட்டன், கிளிஞ்சடா பகுதிகளில் உள்ள மலை தோட்ட காய்கறி விவசாயிகள் பீன்ஸ் பயிரிட ஆர்வம் காட்டி வருகின்றனர்.

விவசாயிகள் தங்கள் தோட்டங்களில் உள்ள தேயிலை செடிகளை கவாத்து செய்து அதன் இடையே ஊடுபயிராக பீன்ஸ் பயிர் செய்துள்ளனர்.

### 2 வகை

நீலகிரி மாவட்டத்தில் 2 வகையான பீன்ஸ் பயிரிடப்படுகிறது. ஒன்று கொடியாக படரும் தன்மை கொண்டது. மற்றொன்று செடி போன்று வளர்ந்து காய்க்கும். விதை விதைக்கப்பட்ட 90 நாட்களில் மகசூல் தருகிறது.

இந்த பகுதி விவசாயிகள் பீன்ஸ் பயிர் செய்வதற்கு முக்கிய காரணமாக மண்ணின் தன்மை சாதகமாக உள்ளது. மேலும் 2 நாட்களுக்கு ஒரு முறை விவசாயிகள் நீர் பாய்த்தால் போதுமானது.

### மேட்டுப்பாளையம்

பீன்ஸ் பயிருக்கு உரமிட்டு, பூச்சி மருந்துகள் தெளித்து வளர்க்கப்படுகினறன. அறுவடைக்கு பின் பீன்ஸ், மேட்டுப்பாளையம் மொத்த காய்கறிமண்டிக்கு விற்பனைக்கு கொண்டு செல்லப்படுகிறது.

அங்கிருந்து கேரளா, ஆந்திரா போன்றவெளிமாநிலங்களுக்கும் சென்னை மதுரை, ஈரோடு உள்ளிட்ட தமிழகத்தின் பிற பகுதிகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.



கொலக்கம்பை பகுதியில் ஒரு விவசாயியின் நிலத்தில் பயிரிடப்பட்டுள்ள பீன்ஸ் பயிர்களை படத்தில் காணலாம்.